## 16

# புறம்பே கண்ணோக்குதல் அவசியமாக இருந்த ஒரு சபை

### (1 கொரிந்தியர் 16:1-24)

கொரிந்து நகரில் இருந்த இடர்ப்பாட்டிற்கு உட்பட்ட சபைக்குப் பவுல் எழுதிய நிருபத்தை அவர், புத்திமதிகள் மற்றும் வாழ்த்துதல்களின் பல் வகைகளுடன் முடித்தார். வேதாகமத்தின் ஒரு பதிப்பு, 16ம் அதிகாரத்தை "சொந்த விஷயங்கள்" என்ற தலைப்புடன் தொகுத்துரைக்கிறது. இந்தப் பகுதியை, பலவித விளக்கவுரைகள் என்பதைத் தவிர வேறு எவ்விதமாகவும் கண்ணோக்குதல் கடினமாக இருக்கும் வேளையில், கொரிந்து நகரில் இருந்த சபைக்குப் பவுலின் எழுத்துக்கள், இன்றைய நாட்களின் சபைக்கு இன்னமும் பொருந்துகின்றன.

சபைக்குப் பவுல் எழுதிய இந்தக் கடைசி வார்த்தைகளில் அவர், ஐந்து புத்திமதிகளைக் கொடுத்தார்.

## "பிற இடங்களில் நடைபெறும் தேவனுடைய ஊழியத்தைப் பற்றி அக்கறையாயிருங்கள்"

> பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து[1] நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.[2] நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும் படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களை கொடுத்து, அவர்களை அனுப்புவேன். நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம் நான் மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போகிறபடியால், மக்கெதோனியா நாட்டைக் கடந்தபின்பு உங்களிடத்திற்கு வருவேன்.
>
> நான் எங்கே போனாலும்[3] நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, நான் உங்களிடத்தில் சிலகாலம் தங்கவேண்டியதாயிருக்கும்; ஒருவேளை மழைகாலம் முடியும்வரையும் இருப்பேன். இப்பொழுது வழிப்பிரயாணத்திலே உங்களைக் கண்டுகொள்ளமாட்டேன்; கர்த்தர் உத்தரவுகொடுத்தால் உங்களிடத்தில் வந்து சிலகாலம் தங்கியிருக்கலாமென்று நம்புகிறேன். ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்.[4] ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான

*கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.*[5]

*தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில், அவன் உங்களிடத்தில் பயமில்லாமலிருக்கப் பாருங்கள்; என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே. ஆனபடியால் ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; சகோதரரோடேகூட அவன் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், என்னிடத்தில் வரும்படிக்கு அவனைச் சமாதானத்தோடே வழிவிட்டனுப்புங்கள்.*

*சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்தோவெனில், சகோதரரோடேகூட உங்களிடத்தில் வரும்படிக்கு அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன்; ஆகிலும் இப்பொழுது வர அவனுக்கு மனதில்லை; அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்போது வருவான் (16:1-12).*

*சகோதரத்துவ அக்கறை என்பது 1 கொரிந்தியர் 16:1-4ன் தெளிவான ஆய்வுக்கருத்தாக உள்ளது. கொரிந்து நகரில் இருந்த சபை - தங்களிடம் இருந்து மிகத் தொலைவில் இருந்த மற்றும் தங்களில் இருந்து மாறுபட்டிருந்த மக்களான - எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்கு உதவி செய்ததினால் சகோதரத்துவத்தில் செயல்முனைப்பான ஒரு பாகமானது என்றால், அவர்கள் ஒரு மேன்மையான சபையாக இருந்திருக்க வேண்டும். 14:34-36ல் கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட பெரிதான சகோதரத்துவத்தின் பகுதியாகக் கொரிந்தியர்கள் தங்களை நினைத்துப் பார்த்தல் அவசியமாக இருந்தது. சபைக்குழுமம் தனித்துவத்தின் ஒரு வகையை நடைமுறைப் படுத்தியதாகப் பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். மற்ற சபைகள் என்ன செய்தன என்பதைக் கருதுவதற்கு அவர்கள் காரணம் எதையும் காணவில்லை; ஆனால் அவர்கள் தங்களின் சிந்திக்கும் வகையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார்.*

*வசனங்கள் 5 முதல் 12 வரையில், மற்றவர்கள் மீதான அக்கறையின் - விசேஷமாக மற்ற இடங்களில் உள்ள இழந்து போகப்பட்டிருப்பவர்களுக்கான அக்கறையின் - முக்கியத்துவம் காணப் படுகிறது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களைப் பவுல் மீண்டும் காண்பதாக 16:5-9ல் கூறினார்; ஆனால் தாம் மற்ற இடங்களில் செய்துகொண்டிருந்த ஊழியமும் முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார். கொரிந்தியர்கள், பவுலினால் புறக்கணிக்கப்பட்டதாக உணருவதற்கு மாறாக, அவர் எபேசு நகரில் "திறந்த வாசல் ஒன்றை" கண்டதற்காக அவர்கள் அகம் மகிழ வேண்டும்.*

*தீமோத்தேயுவும் கர்த்தருக்காக ஊழியம் செய்துகொண்டிருந்தார் என்று, 16:10, 11ல் பவுல் சுட்டிக்காண்பித்தார். சகோதரர்களை அவர் விரைவில் காண்பார்; ஆனால் அவர்களை பார்த்தபின்பு, அவர்கள் அவரை மற்ற இடங்களில் ஊழியம் செய்யக் கூடியவராக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக, அப்பொல்லோ இந்த வேளையில் கொரிந்து நகரில் ஊழியம் செய்வதற்கு வரக்கூடாதிருந்தது (16:12). அவர் இல்லாமை குறித்து அவர்கள் மனச்கசப்பு அடையக்கூடாது, ஆனால் தாம் மற்ற இடங்களில் ஊழியம் செய்ய வேண்டியிருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார்.*

## “திடன் கொண்டவர்களாக மற்றும் அன்புள்ளவர்களாக இருங்கள்”

கொரிந்தியர்கள் மேம்படுத்திக் கொள்ள அவசியமாயிருந்த நான்கு பண்புகளை 13ம் வசனம் பட்டியலிடுகிறது. அவர்கள் விழித்திருக்க வேண்டும், திடன் கொண்டிருக்க வேண்டும், “தைரியமாயிருக்க வேண்டும்” (NLT) மற்றும் பெலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்களிடத்தில் பவுல் வேண்டிக்கொண்டார்.[6] NASB வேதாகமத்தில் “எச்சரிக்கையாயிருங்கள்” “விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்.” “ஆண்களாகச் செயல்படுங்கள்” மற்றும் “பெலமாயிருங்கள்” என்றுள்ளது. இந்த நான்கு கருத்துக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக உள்ளன. கொரிந்தியர்கள் உபதேசம் மற்றும் ஒழுக்கரீதியான விஷயங்கள் பற்றி, தங்கள் விசுவாசத்திற்கு, உள்ளிருந்தும் புறம்பே இருந்தும் வரும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் சொந்த ஐக்கியத்திற்குள் இருந்த கள்ளப் போதகர்களை எதிர்த்து நிற்க வேண்டியிருந்த அதே வேளையில், பொல்லாத ஒரு நகரத்தின் புறதெய்வ வணக்கச் சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாக இருக்க முயற்சி செய்யவும் வேண்டியிருந்தது.

இப்படிப்பட்ட எதிர்ப்பு இருந்த காலத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? பெலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்! அதை அவர்கள் எவ்வாறு செய்ய வேண்டும்? அன்பிலே செய்ய வேண்டும்! (வசனம் 14). அவர்கள் எதைச் செய்தாலும், அதை அவர்கள் அன்பிலே செய்ய வேண்டி இருந்தது. பவுல் தமது கடைசி வார்த்தைகளில், 13ம் அதிகாரத்தின் ஆய்வுக்கருத்தை மறுபடியும் குரல் எழுப்பினார் (காண்க 16:22, 24). கொரிந்தியர்கள், சோதனைகளை எதிர்த்து நிற்பதிலும் தவறை மறுப்பதிலும் பெலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அதை அன்பான நடக்கையுடன் செய்யவேண்டும்! உள்ளூர் சபையொன்று, பின்வருவதைக் காட்டிலும் மேன்மையான இலக்கு ஒன்றைக் கொண்டிருக்க இயலாது: பலம் உள்ளவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருத்தல்!

## “தேவனுடைய ஊழியர்களைக் கனம்பண்ணுங்கள்”

16:15, 16ல் சில தனிநபர்கள் பெயர்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளனர். முதலில் பவுல், ஸ்தேவானுடைய வீட்டாரைப் பற்றிப் பேசினார் (காண்க 1:16). இந்தக் குடும்பத்தார், “பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருந்தனர்” (16:15). இப்படிப்பட்ட மக்களுக்கு கொரிந்து நகரில் இருந்த சகோதரர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? அவர்கள் “இப்படிப்பட்டவர்களுக்குக் . . . கீழ்ப்படிந்திருக்க வேண்டும்” (16:16). பவுல் அர்த்தப்படுத்தியது என்ன? இந்த சந்தர்ப்பப் பொருளில் அவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்கச் சாத்தியமில்லை.[7] பெரும்பாலும் அவர், சகோதரர்கள் அவர்களை மதிக்க வேண்டும், அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும், அவர்களைப் பராமரிக்க வேண்டும், அவர்களை ஆதரிக்க வேண்டும், அவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும் மற்றும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றே கூறியிருப்பார்.[8]

அடுத்ததாகப் பவுல், கொரிந்து நகரில் இருந்து தம்மிடத்தில் வந்திருந்த

மற்ற இரண்டு மனிதர்களுடன், ஸ்தேவானை மீண்டும் குறிப்பிட்டார்: பொர்த்துனாத்து, அகாயுக்கு (16:17, 18). அவர்கள் அனேகமாக, கொரிந்து சபை பவுலிடம் கேட்க விரும்பிய கேள்விகள் அடங்கிய கடிதம் ஒன்றை அவருக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். கொரிந்தியர்கள் சார்பாக அவர்கள் செய்திருந்த நல்ல செயலைப் பவுல் அங்கீகரித்தார் மற்றும் சபையார் அவர்களைக் கனம்பண்ண வேண்டும் என்று கூறினார்.

## "கிறிஸ்தவர்களை ஒன்றாக 'பிணைக்கும் முடிச்சை' உணர்ந்து அறியுங்கள்"

பவுல், தாம் இருந்த சபைகளின் குழுமங்களில் - ஆசியாவில் இருந்த சபைகளில் - இருந்த வாழ்த்துக்களை, கொரிந்துவில் இருந்த தனியொரு சபைக்கு அளித்தார் (16:19, 20). மேலும் அவர், ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் என்ற திருமணமான தம்பதியரிடம் இருந்தும், அவர்கள் வீட்டில் கூடிவந்த சபையிடம் இருந்தும் வாழ்த்துக்களை அனுப்பினார்.[9] அடுத்ததாக அவர், தாம் இருந்த இடத்தில் இருந்த "சகோதரர்கள் எல்லார்" சார்பிலும் கொரிந்தியர்களை வாழ்த்தினார். பின்பு அவர், அவர்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்தும்படி ஒவ்வொருவருக்கும் கூறினார். கடைசியாக அவர், சபைக்கு தமது சொந்த வாழ்த்துக்களை அளித்தார்.

இந்த வாழ்த்துக்கள் எல்லாவற்றின் நோக்கம் என்னவாக இருந்தது? செய்வதற்கு பண்புடையது என்பதால் மாத்திரம் இப்படிப்பட்ட வாழ்த்துக்களைப் பவுல் உள்ளடக்கவில்லை. அதற்குப் பதிலாக, இந்த வாழ்த்துக்களைப் பயன்படுத்தியதன் மூலம் பவுல், எல்லாப் பரிசுத்தவான்களும் ஒன்றாயிருந்தனர் என்று விளக்கப்படுத்தினார். அன்பின் வாழ்த்துக்கள் என்பவை அவர்கள் ஒருமைப்பாட்டை ஒப்புக் கொள்பவையாக, கிறிஸ்தவர்களை "பிணைக்கும் முடிச்சை" உறுதிப்படுத்தினார். எங்கும் உள்ள சபைகள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகப் பிணைக்கப் பட்டுள்ளன.

## "கர்த்தருடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ளுங்கள்"

பவுல் தமது நிருபத்தை முடிக்கும் வேளையில் கர்த்தருடன் சரியான உறவு கொண்டிருத்தலின் அவசியத்தை மறுபடியும் வலியுறுத்தினார். கர்த்தருக்கு அன்பைக் காட்சிப்படுத்தாதவர்கள் சபிக்கப் பட்டவர்களாக உள்ளனர் (16:22அ). பவுல் இவ்விடத்தில் கள்ளப் போதகர்களைக் குறிப்பிட்டிருக்கலாம். அவ்வாறு இருந்தது என்றால், "கர்த்தர் மீது அன்பு" கூராமல் சபைகளைப் பிய்த்து, கர்த்தருடைய ஊழியத்தில் கனவீனத்தைக் கொண்டுவரும் கள்ளப் போதகர்களுக்கு நாம் பரிவிரக்கம் காண்பிக்கலாகாது என்று, அவரது [பவுலின்] வார்த்தைகள் நமக்குக் கருத்துத் தெரிவிக்கின்றன.

கர்த்தர்மீது அன்புகூராதிருப்பவர்களுக்கு நேர் மாறாக, அவர் மீது பவுல் அன்புகூர்ந்தார். அவர் கர்த்தரின் வருகையை முன்னெதிர்பார்த்திருந்தார்; எனவே அவர், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்!" என்று அர்த்தப்படும் வகையில் "மாரநாதா" என்று கூறினார் (16:22ஆ). கர்த்தர் மீது அவர் கொண்டிருந்த அன்பினிமித்தம். இயேசுவின் கிருபை கொரிந்தியர்களோடு

இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார் (16:23). தேவனுடைய அன்பை அவர் அறிந்திருந்தபடியால், கிறிஸ்துவுக்குள் இருந்த கொரிந்தியர்கள் மீது தாம் கொண்டிருந்த அன்பைப் பற்றி அவரால் தாராளமாகப்பேச முடிந்தது (16:24).

## தொகுப்புரை: "மற்றவர்கள்மீது அன்புகூருங்கள்"

ஒருவேளை, இந்த ஐந்து வேண்டுகோள்களும் "அன்பு" என்ற தலைப்பின்கீழ் உள்ளடக்கப்படக் கூடும். கொரிந்தியர்கள் ஒருவர் மற்றவர்மீது அன்புகூர வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பவுல் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தார். 16ம் அதிகாரத்தில் அவர், மற்றவர்களிடத்திலும் அவர்களின் அன்பு காண்பிக்கப்பட வேண்டும் என்று கூடுதலாகக் கூறினார். செயல்விளைவில் அவர், "சகோதரத்துவத்தின் மீது அன்புகூருங்கள் மற்றும் இழந்து போகப்பட்டவர்கள் மீது அன்புகூருங்கள். சத்தியத்தின்மீது அன்புகூருங்கள், தேவனுடைய ஊழியக்காரர்கள்மீது அன்புகூருங்கள். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதர சகோதரிகள் எங்கிருந்தாலும், அவர்கள்மீது அன்புகூருங்கள். கடைசியாக, எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தர் மீது அன்புகூருங்கள்" என்று கூறினார். பேதுரு "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று எழுதினார் (1 பேதுரு 4:8) - இடர்ப்பாடுகளுடன் இருந்த ஒரு சபைக்கு, திரளான பிரச்சனைகளுக்கு, அன்பு என்பதே தீர்வாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]நிருபத்தின் இப்பகுதி [ஆங்கில வேதாகமத்தில்] "Now concerning" என்று தொடங்குவதால் (7:1, 8:1, மற்றும் 12:1 ஆகியவற்றை ஒப்பிடவும்), காணிக்கை பற்றிக் கொரிந்தியர்கள் பவுலினிடம் கேள்வியொன்றைக் கேட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. [2]"சேர்த்துவைக்கக்கடவன்" ("தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்"; KJV) என்பது, சில விளக்கவுரையாளர்களுடைய கண்ணோக்கின்படி, பொதுவாகச் சேகரித்தல் என்பதற்கு மாறாக, பணத்தைத் தனிப்பட்ட வகையில் சேகரித்து வைத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துவதாக உள்ளது. இருப்பினும் இவ்வசனத்தின் இரண்டு அம்சங்கள், வாரந்தோறும் பொதுவாகப் பணம் சேகரிக்கப்படுதலையே அர்த்தப் படுத்துகின்றன: (1) பணம் சேகரித்தல் என்ற செயலுக்கு, வாரத்தின் ஒரு குறிப்பிட்ட நாளைக் குறிப்பாகக் கூறுதல் என்பது, பொதுவாகச் சேகரித்தலையே அர்த்தப்படுத்துகிறது மற்றும் (2) உண்மையில் ஒவ்வொரு உறுப்பினரும் தம்மிடத்திலேயே பணத்தை சேகரித்து வைத்துக் கொண்டார் என்றால், பவுல் வரும்போது ஒரு பணம் சேகரித்தல் நடைபெற வேண்டும் - அதைத் தவிர்க்கவே பவுல் விரும்பினார். [3]உண்மையில் பவுல், எருசலேமுக்குச் செல்லும் வழியில், கொரிந்து நகரில் கடைசியாக மூன்று மாதங்களைச் செலவிட்டார்; மெக்கதோனியாவில் இருந்து அவர், கொரிந்து நகரம் உட்பட, கிரேக்க நாட்டிற்குச் சென்றார் (நடபடிகள் 20:1-3). மேலும் புறஜாதியாரின் பல சபைகளில் (நடபடிகள் 20:4) இருந்து பிரதி நிதிகள், எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்குக் காணிக்கை எடுத்துக்கொண்டு அவருடன் துணையாகச் சென்றனர். [4]"பெந்தெகொஸ்தே" என்பது யூதர்களின் பிரதான பண்டிகைகள் மூன்றில் ஒன்றாக இருந்தது, இது பஸ்காவுக்கு ஐம்பது நாட்கள் பின்பு ஏப்ரல் முதல் ஜூன் மாதத்திற்குள் ஒரு நாளில் வந்தது. [5]எபேசுவில் பவுல் பெற்றிருந்த வாய்ப்புகள் மற்றும் அவருக்கு விரோதம் செய்தவர்கள் பற்றிய வரலாற்றுப் பூர்வமான விபரங்களுக்கு நடபடிகள் 18-20 அதிகாரங்களில் காணவும். [6]13 மற்றும் 14ம் வசனங்கள்

*"நடைமுறை விஷயங்கள் பற்றி, தெளிவானவைகளாக, நேரடியானவைகளாக மற்றும் பெரும்பாலும் நடைமுறைக்கேற்ற அறிவுரையாக . . . உள்ளன"* (Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1999], 362). [7]*இருந்தபோதிலும் "கீழ்ப்படிந்திருத்தல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட (hupotassō . . . என்ற) வார்த்தை, சபை உறுப்பினர்கள், நடத்துனர்களுக்குக் கீழாக இருக்க அல்லது கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் மற்றொரு இடத்தில் கூறப்பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகவே உள்ளது.* [8]*எபேசியர் 5:21ல் கிறிஸ்தவர்களுக்கு "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.* [9]*"ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் கொரிந்தியர்கள் அறிந்திருந்தனர் மற்றும் அவர்கள் எபேசு நகருக்கு வந்திருந்தனர் (நடபடிகள் 18:2-3, 18, 24-27)"* (Craig Keener, *The IVP Bible Background Commentary - New Testament* [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 490).